**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 236/2022**

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் நாள் Pw3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வா.சா. 3 ( வினோத்குமார்) நாள் 12.08.2025**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

வாதி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி தயார் செய்து கொடுத்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். வாதியை எனக்கு 10 ஆண்டுகளாக பழக்கம். வியாபார ரீதியாக வாதி எனக்கு பழக்கம். பிரதிவாதியை எனக்கு யார் என்றே தெரியாது. பிரதிவாதியை பணம் வாங்கிய தேதியில் பார்த்தேன். அதற்கு முன்பும் பின்பும் பார்க்கவில்லை. இந்த வழக்கின் பிரதிவாதி பணம் வாங்கிய தேதியில் வந்த தெய்வசிகாமணி என்பது எனக்கு தெரியும். பிரதிவாதிகக்கு சுமார் 50-55 வயதிருக்கும். எனக்கு பத்திரம் எழுதும் பணி அல்ல. நான் இதற்கு முன்பு வேறு பத்திரங்கள் எழுதவில்லை. நான் எழுதியதாக சொல்லும் ஆவணம் கடனுறுதி சீட்டு. கோவிந்தசாமி என்பவரைஎனக்கு தெரியாது, நான் அவரை பார்த்ததில்லை. நான் கடனுறுதி சீட்டை நான் பணம் கொடுத்தபோது தான் எழுதினேன். வாதி என்னிடம் கடனுறுதி சீட்டில் தேதியை பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்டாரா என்றால் இல்லை. கடனுறுதி சீட்டை வாதி வாங்கி வைத்திருந்தார். கடனுறுதி சீட்டில் எழுதி அன்று தான் பார்த்தேன், அதன் பின் பார்க்கவில்லை. தேதி எனக்கு ஞாபகமில்லை என்றால் ஞாபகம் உள்ளது. எதன் அடிப்படையில் கடனுறுதி சீட்டு எழுதியதால் ஞாபகம் உள்ளது. என் தகப்பனாரின் பிறந்த தேதி, திருமண தேதி, என் தாயாரின் பிறந்த தேதி ஆகியவை எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினம் முக்கியமான தினம் அல்ல. கடனுறுதி சீட்டு எழுத பல பேனாக்கள் பயன்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. ஒரே பேனாவால் எழுதப்பட்டது. ரேகை வைப்பதற்கு ரேகை அட்டை பயன்படுத்தப்பட்டது. ரேகை யாருடைய ரேகை என்று அடையாளம் காட்டப்பட்டதா என்றால்

எழுதப்படவில்லை. ஒரு இடத்தில் தான் ரேகை பெறப்பட்டது. கடனுறுதி சீட்டில்அடித்தல் திருத்தல் இல்லை. கிழமை எழுதப்பட்டதா என்றால் இல்லை. தமிழ் தேதி , மாதம மற்றும் ஆண்டு எழுதப்பட்டது. விலாசம் ஆதார் அட்டை அடிப்படையில் எழுதப்பட்டதா என்றால இல்லை தரப்பினர்கள் சொல்ல எழுதப்பட்டது. பிரதிவாதி ஒருபோதும் என் முன்பாக கையொப்பம் மற்றும் கைரேகை பெறப்படவில்லை என்றால சரியல்ல, என் முன்னிலையில் பிரதிவாதி வாதியிடம் பணம் பெறவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரைணையில் சொன்னதுபோல் பிரதிவாதி வாதியிடம் கடன் பெறவில்லை என்றும் கடனுறுதி வீட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகறிக்க வேண்டி நானும் வாதியும் சேர்ந்து கொண்டு கடனுறுதி சீட்டை தயார் செய்துள்ளோம் என்றால சரியல்ல. வாதி எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆவணம் தயார் செய்ய நான் உதவியாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி சீட்டு நடத்தி வருகிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.08.12 16:50:24 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS